**அசல் வழக்கு எண். 146/2019**

12.11.2025

**பெயர் – மருதாச்சலம்** (PW2)

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நீதிமன்றத்தில் அழைப்பாணை எதுவும் பெறவில்லை வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் எந்த தேதியில் தயார் செய்யப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு பூர்வீகம் பழனி வட்டம் நெய்காரபட்டி. காரத்தொழுவில் 35 வருடங்களாக குடியிருக்கிறேன். பிரதிவாதி சொக்கலிங்கத்தின் அப்பா பெயர் தெரியாது. பிரதிவாதியின் உடன் பிறந்தவர்கள் விவரம் தெரியும் பழனியப்பன், ராமசாமி, சொக்கலிங்கம், நாகராஜன் மற்றும் ஈஸ்வரி. பிரதிவாதி சொக்கலிங்கத்திற்கு இரு சகோதரிகள் என்றால் சரியல்ல. வாதி சரஸ்வதி முதல் திருமணம் விவாகரத்து ஆகிவிட்டது என்றால் சரிதான். முதல் கணவர் பெயர் தெரியாது.

(2) வாதி சரஸ்வதிக்கும், பிரதிவாதி சொக்கலிங்கத்தின் சகோதரருக்கும் சட்டப்படியான திருமணம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. கோவிலில் வைத்து குடும்பத்தார் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. நாகராஜன் என்பவர் வாதி சரஸ்வதியுடன் திருமணத்திற்கு மீறிய உறவில் இருந்தார் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து காரத்தொழுவு பஞ்சாயத்து 9 வது வார்டில் உள்ளது. நானும் அதே வார்டில் குடியிருக்கிறேன். தாவாச் சொத்தும், சொக்கலிங்கம் வீடும் ஒரே வீடாக இருந்தது தற்போது இருவரும் தனித்தனியாக கட்டிக்கொண்டார்கள். நாகராஜ் இருந்த போதே அவர் தனியாக வீடு கட்டி மின் இணைப்பு பெற்றுவிட்டார். தாவாச் சொத்தை நாகராஜ்க்கு சொக்கலிங்கம் தான் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல இருவரும் ஒரே வீட்டில் இருந்தார்கள் பங்கு பிரித்துக்கொண்டார்கள். தாவாச் சொத்து தற்போது இடிந்த நிலையில் உள்ளது என்றால் சரியல்ல மராமத்து செய்து பயன்படுத்தி வருகிறார். வாதி சரஸ்வதி திருப்பூரில் வேலை செய்து தினமும் காரத்தொழுவிற்கு வீட்டிற்கு வந்து செல்வார் உடல் நிலை சரியல்லாத சமயத்தில் தாராபுரம் ரஞ்சிதாபுரத்தில் அவரது அம்மா வீட்டில் இருப்பார்.

(3) நாகராஜ், சரஸ்வதி திருமணத்திற்கு பத்திரிக்கை அடிக்கப்பட்டதா என்றால் இல்லை. இருவரும் ஒரே குலத்தை சேர்ந்தவர்கள் குல வழக்கப்படி உறவினர்கள் மற்றும் பெரியவர்கள் முன்னிலையில் திருமணம் செய்து கொண்டார்கள். எந்த வருடம் நாகராஜ்க்கு செட்டில்மெண்ம் எழுதி வைக்கப்பட்டத

என்றால் 2015 ம் ஆண்டு எழுதி வைக்கப்பட்டது. தாவாச் சொத்தின் செக்கு பந்தி என்ன என்றால் கிழக்கே மதர்கான் பிடாரி பாய் வீடு உள்ளது, தெற்கே ராமசாமி கவுண்டர் வீடு உள்ளது, மேற்கே சொக்கலிங்கம் வீடு உள்ளது, வடக்கே பொன்னுச்சாமி வீடு உள்ளது. சொக்கலிங்கம் கிரையத்திற்கு பெற்ற வீட்டை நாகராஜ்க்கு எழுதி வைத்தார் என்றால் சரியல்ல அது அவர் அப்பா, அம்மா வாங்கிய சொத்து.

(4) நாகராஜ் கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் வைத்து இறந்தார். பெயர் தற்போது ஞாபகம் இல்லை. வாதியிடமிருந்து பிரதிவாதி சொக்கலிங்கம் தாவாச் சொத்தை விலைக்கு கொடுக்க கோரி எந்த தேதியில் மிரட்டினார் என்றால் தேதி தெரியவில்லை. பிரதிவாதி வாதியை எந்த தொந்தரவும் செய்யவில்லை. வாதியின் தூண்டுதலின் பேரில் பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொக்கலிங்கம் சரஸ்வதி நாகராஜின் மனைவி இல்லை என்று சொல்லியுள்ளார் சரஸ்வதி தான் தான் மனைவி என்று சொத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். சரஸ்வதி, சொக்கலிங்கம் குடும்ப விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.11.12 19:16:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்